செ.வெ.எண்-366/2017

நாள்: 22.06.2017

**வேலூர் மாவட்டத்திலுள்ள சிறுபான்மையினர் தொழில் தொடங்க ஓர் அரிய வாய்ப்பு! சிறுபான்மையினருக்கு கடன் வழங்கும் சிறப்பு முகாமில் கலந்து கொண்டு பயன்பெற மாவட்ட ஆட்சியர் அழைப்பு!!**

தமிழகத்தில் சிறுபான்மையினர்களாகக் கருதப்படும் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர் பார்சிகள் மற்றும் ஜெயின் மதங்களைச் சார்ந்தவர்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும் வகையில் வியாபாரம் மற்றும் தொழில்கள் செய்வதற்கு பல்வேறு கடன் உதவித் திட்டங்களை தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (டாம்கோ) செயல்படுத்தி வருகிறது.

இதன்படி, வேலூர் மாவட்டத்தில் கடன் பெற தகுதியானோருக்கு சிறப்பு முகாம் நடத்தப்படவுள்ளது. தனிநபர் கடன் திட்டம், வியாபாரம், தொழில் தொடங்கிடவும் ஏற்கெனவே செய்து வரும் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடன் அளிக்கப்படுகிறது. சில்லறை வியாபாரம், மரபுவழிச் சார்ந்த தொழில்கள், சேவை சார்ந்த தொழில் நிலையங்கள், இலகுரக போக்குவரத்து வாகனக்கடன், விவசாயம் தொடர்பான தொழில்கள் செய்ய கடன் வழங்கப்படுகிறது.

இவை தவிர மாணவர்களுக்கு கல்விக்கடன், கறவை மாடு கடன் உதவி, ஆட்டோ கடன், சிறுகடன் என பல்வேறு நிலைகளில் கடனுதவி வழங்கப்படுகிறது.

இத் திட்டங்கள் தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கம் பெறவும், பயனாளிகள் விண்ணப்பிக்கவும் வசதியாக ஜீன் 29-ஆம் தேதி (29.06.2017) வேலூர் மாவட்டத்தில் சிறப்புமுகாம் நடைபெற உள்ளது. வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள 'எ' பிளாக் ஐந்தாவது தளத்திலுள்ள கூட்ட அரங்கில் வியாழக்கிழமை காலை 11 மணிக்கு முகாம் தொடங்கும்.

கடன் தேவைப்படும் சிறுபான்மையினர் சமுதாயத்தை சார்ந்த நபர்கள், தங்களது சாதிச்சான்று, பள்ளி மாற்றுச்சான்று, வருமானச் சான்று, குடும்ப அட்டை, இருப்பிடச்சான்று, கடன் பெறும் தொழில்குறித்த விவரம், திட்ட அறிக்கை ஓட்டுநர் உரிமம் நகல், ஆதார் அட்டை மற்றும் கூட்டுறவு வங்கி கோரும் இதர ஆவணங்களுடன் நேரில் பங்கேற்கவும், தகுதியான மனுக்கள் மீது கடன் வழங்க வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும். இந்த அரிய வாய்ப்பினை சிறுபான்மையினர் இனத்தினர்கள் தங்களின் வாழ்வின் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் விவரங்களுக்கு

தொலைபேசி எண் -(0416) 2254012,
9444267094,
9942107078

என்ற தொலைப்பேசி எண்களுக்கு அலுவலக நாட்களில்
காலை 10.00 மணிமுதல் மாலை 6.00 மணி வரை
தொடர்பு கொள்ளலாம்

22/6/17

செய்திமக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்